புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

==================================================================

# அகநானூற்றில் பரத்தை கூற்றுப் பாடல்களில் பெண் – மொழி – புனைவு

==================================================================

**ஆய்வாளர்**
***ப.சீத்தாலட்சுமி,***
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல்துறை,*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலை நகர் - 608002.*
==================================================================

***முன்னுரை***

*சங்க இலக்கிய அகமரபில் காணப்படும் பெண் மாந்தர்களில் குடும்ப அமைப்புச் சாராத பெண்ணாக வாழ்பவள் பரத்தை. பரத்தையின் பாத்திரப்படைப்புச் சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. பரத்தை குறித்த செய்திகள் மருதத்திணையில் மிகுதியாகக்; காணப்படுகிறது. அவற்றுள் அகநானூற்றில் உள்ள பரத்தை கூற்று பாடல்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அதில் உள்ள பரத்தை கூற்றினுடைய பெண்களின் செயல்கள் பற்றியும், அதில் கூறப்பட்ட கருத்துக்களைப் பற்றியும், அதில் சொல்லப்பட்ட புனைவுகள் பற்றியும் பேசுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

***குறிசொற்கள்***

*பெண்ணியம்,- பரத்தைமை பாடல்கள், - பெண் - மொழி - புனைவுகள்,*

***பரத்தை கூற்றுப் பாடல்கள்***

*சங்க இலக்கியத்தின் சிறப்பை உணர்த்தும் நூல்களுள் அகநானூறும் ஒன்று. அதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. அவை குறிஞ்சித்திணையில் 40 பாடல்களும், முல்லைத்திணையில் 40 பாடல்களும், நெய்தல் திணையில் 40 பாடல்களும்,*

*பாலைத்திணையில் 240 பாடல்களும் அமைந்துள்ளன. அவற்றுள் மருதத்திணை சார்ந்துள்ள 40 பாடல்களில் பரத்தைமை குறித்த செய்திகள் காணப்படுகின்றன. பரத்தையற் குறித்து,*

> *"யாரையும் நயவா இயல்பிற் சிறந்த*
> *சேரிப்பரத்தையர் மகளீ ராகிக்*
> *பாதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்"*[1]

*என்று அகப்பொருள் விளக்கம் குறிப்பிடும். இப்பரத்தை கூற்றுப்பாடல்கள் அகநானூற்றில் 7 பாடல்கள் உள்ளன. அவை,*

*76 - பரணர்*
*106 - ஆலங்குடி வங்கனார்*
*166 – இடையன் நெடுங்கீரன்*
*186 - பரணர்*
*216 – ஐயூர் முடவனார்*
*276 - பரணர்*
*336 – பாவைக் கொட்டிலார் ஆகியன பரத்தைக் கூற்று பாடல்களாக உள்ளன.*

**பரத்தைக் கூற்றில் பெண்**

*மருத நில மக்களின் வாழ்க்கை முறையிலும் பண்பாட்டிலும் பரத்தையர் ஆதிக்கமும் ஊடுருவலும் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. இப்பாடல்கள் தலைவியின் அகமனவருத்தத்தையும் பரத்தைமையால் உண்டான பாதுகாப்பற்ற தன்மையினால் தலைவனைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வேகமும், அதனால் பரத்தையை இகழ்வதும், அதற்குப் பரத்தை எதிர்மொழி உரைப்பவளாகவும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன எனலாம். மேலும், தலைவி இகழ்வதால் சினமுற்ற பரத்தை தலைவனைக் கைப்பற்றுவேன் என்று சூளுரைப்பதாகப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. தலைவியின் சொற்களால் ஏற்பட்ட அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் தலைவிக்கே சவால் விடுகின்ற பரத்தை கூற்றுப் பாடல்கள் காணப்படுகின்றன. இதைப் பற்றி உரைக்கின்ற பிராய்டு,*

> *"மனக்காயம் என்பது நனவிலி மனத்தில் சுருக்கப்பட்டு உருவகமாக மொழியில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. பரந்துபட்ட மனக்காயங்களே மொழியாக வெளிப்படுகிறது. அது ஒவ்வொரு தன்னிலையைப் பொறுத்தும், வடிவம் எடுக்கிறது"* [2]

*எனக் கூறுகிறார். இங்கே பரத்தையின் மனக்காயம் நனவிலியின் மனைவி என்கிற தகுதியின் மேல் உள்ள ஏக்கம், பொறாமை, மனக்கொந்தளிப்பு அடைவதாக நனவிலி*

செயல்பாடாக நின்று தலைவியிடம் சவால் விட வைக்கிறது என உளவியல் விளக்கம் பரத்தை கூற்றிற்கு அளிக்கப்படுவதையும் கூர்ந்து நோக்கத் தக்கதாகும்.

**பரத்தை கூற்றில் பெண்மொழி**

பெண்ணான தலைவிக்குரிய பண்புகளாக அச்சம், மடம், நாணம் என்று வரையறுக்கும் தொல்காப்பியர்

*"தன்னுரு வேட்கை கிழவன் முன் கிளத்தல்*
*என்னுங்காலை கிழத்திக்கு இல்லை*
*பிறநீர் மாக்களின் அரிய ஆயிடை பெய்நீர்போலும்*
*உணர்விற்று என்ப"*[3]

என்ற நூற்பாவில் உரைக்கிறார். ஆணாதிக்க விழுமியங்களால் பெண்ணுக்கான மொழியைத் தொல்காப்பியர் தடை செய்கிறார் எனக் கருதவும் இந்நூற்பா வகை செய்கிறது எனலாம். அகஇலக்கிய பாடல்களில் உள்ள பெண்பாற் கூற்றுகளில் நற்றாய், செவிலி, தோழி, தலைவி ஆகியோருள் ஓரளவாது பேசுபவள் தோழி மட்டுமே. அவளும் பலவித கட்டுப்பாடுகளுக்கிடையே பேசுகிறாள். ஆனால் இவர்களிடமிருந்து வேறுபட்டு ஒற்றைக் குரலாய் ஒலிக்கிறது பரத்தையின் குரல். எனவேதான் பெண்ணிற்கு உயிரைவிட நாணமே உயர்ந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் பரத்தை இதனைத் துச்சமாக மதித்துப் பேசுகின்றாள்.

*"யாந்தம் பகையேம் அல்லேம் சேர்ந்தோர்*
*திருநுதல் பசப்ப நீங்கும்*
*கொழுநனுஞ் சாலுந்தன் உடனுறை பகையே"*[4]

தலைவன் மீதான கோபத்தை, பரத்தை மீது காட்டும் தலைவியிடம் நான் உன்னுடைய பகையாளி அல்ல, உனக்கும் எனக்கும் இடையில் நிற்கும் தலைவனே உனக்கு உடனுறை பகை என்று கூறுகிறாள். பரத்தையின் இத்தகைய பேச்சு அதிகாரத்திற்கெதிரான கலகச் செயற்பாடாக மாற்றம் அடைகிறது எனலாம். "பேச்சு மரபில்தான் உண்மை தொடர்ந்து பதிவாகி வருகிறது. பேச்சு அதனுடைய தூய்மையான வடிவத்தில் ஆன்மாவின் உள்ளார்ந்த அதிர்வுகளின் வெளிப்பாடாக அமைகிறது"[5] என்பார் அறிஞர் ஹெகல் கூறுகிறார். பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்ளும் பெண், தங்கள் வாழ்க்கை நிலையினை நிலைநிறுத்திக் கொள்ள ஆணைச் சார்ந்து வாழவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகிறாள். அதனால் அவளுடைய மொழியானது அதிகார தோரணையிலும், தலைவியை இகழ்பவளாகவும், தலைவனைத் தன்னிடம் தக்க வைத்துக் கொள்ள, அனைத்து வகையிலும் போராடுபவளாகவும், அவளது மொழி பிரதிபலிக்கிறது.

பரணர் இயற்றிய மற்றொரு பாடலில்

*"தாரும் தானையும் பற்றி ஆரியர்*

*பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல*
*தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்*
*மார்புகடி கொள்ளே னாயின் ஆருவுற்று*
*இரந்தோர்க் கீயாது ஈட்டியோன் பொருள்போல்*
*பரந்து வெளிப்படா தாகி*
*வருத்துக தில்ல ஓம்பிய நலனே"*[6]

என இரந்தோர்க்கு ஈயாது ஈட்டிய பொருள் அழிந்து போவது போல் உன் அழகும் அழிந்து போகட்டும் என்று தலைவனைக் கைப்பற்ற நினைக்கும் பரத்தை கூறுகிறாள். இல்லற உரிமையுடையவள் தலைவி. அவளே தலைவன் பரத்தையரிடம் சென்றது குறித்து உரிமையாகச் சண்டையிடக் கூடியவள். அவள் அமைதியாக இருக்கவும் உரிமை இல்லாத பரத்தை வஞ்சினம் கூறுகிறாள். இடையன் நெடுங்கீரனார் இயற்றிய,

*"..... நெருதல்*
*தார்பூண் களிற்றின் தலைப்புனை தழீஇ*
*வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு*
*புதுவது வந்த காவிரிக்*
*கோடுதோய் மலிர்தோய் மலிர்நிறை யாடி யோறே"*[7]

என்ற பாடலில் தலைவன் பரத்தையொடு புனலாடியதை அறிந்த தலைவி ஊடல் கொண்டாள். தலைவியின் ஊடலை தீர்ப்பதற்காகத் தலைவன் தான் பரத்தையொடு புனலாடவில்லை என்று பொய் கூறுகிறான். இதனை அறிந்த பரத்தை தலைவன் தன்னுடன் புனலாடவில்லை என்றால் நேற்று தன்னுடன் காவிரியில் புதுப்புனலில் நீராடியது யார் என்று தலைவி கேட்குமாறு பரத்தை தன் தோழியிடம் தலைவனை எள்ளி நகையாடுகிறாள். இவ்வாறாகப் பரத்தை மொழியானது தலைவியை இகழ்ந்து பேசுபவளாகவும் தலைவனைத் தன்னிடம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையிலும் உள்ளது எனலாம்.

**பரத்தை கூற்றில் புனைவு**

பரத்தை கூற்றுப் பாடல்கள் இயற்றியோரில் பெரும்பாலோனர் ஆண்பாற்புலவர்களே, பெண்ணின் மனநிலையை வெளிப்படுத்த ஒரு பெண்ணே இயலும். பெண்ணின் மனநிலையை ஆண் வெளிப்படுத்த முயல்வது வெறும் புனைவுத் தன்மை கொண்டதாக அமையுமே தவிர உண்மை நிலையை வெளிப்படுத்தாது என்பது பெண்ணியல் ஆய்வாளர்களின் கூற்றாக உள்ளது இங்கு நோக்கத்தக்கதாகும். இதனை "உன்னையே நீ எழுது. உன் உடம்பில் குரல்களுக்குச் செவிசாய். அப்போதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நினைவிலிருந்து மனதிலுள்ள மூலவளங்கள் எல்லாம் பொங்கி புறப்பட்டு வெளிவரும்"[8] என அறிஞர் ஹெலன் கூறுகிறார். ஆலங்குடி வங்கனார் இயற்றிய,

*"உலமலந்து வருக சென்மோ – தோழி*
*ஒளிறுவாட் தானைக் கொற்றச் செழியன்*
*. . . . . . . . . . . . . . . . . . . . .*
*தண்ணுமை கண்ணின் அலைஇயர் தன்வயின்"* [9]

என்ற பாடலில் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அறிந்த தலைவி தன் கணவனுடன் பரத்தையைத் தொடர்புபடுத்தி ஏசுகிறாள். அது கேட்ட பரத்தை தலைவி தன் வயிற்றில் அறைந்து வருந்தும்படியாக அவள் வீட்டருகில் உலவி வருவோம் என்று தலைவியைப் பற்றி தன் தோழியரிடம் எள்ளி நகையாடுகிறாள். பரத்தையைத் தலைவிக்கு எதிராக, அதாவது பெண்ணுக்குப் பெண்ணே எதிரியாகச் சங்க இலக்கிய காலம் தொட்டே புனையப்பட்டுப் பாடல்கள் எழுதப்பட்டு வருகிறது. இதுவே பெண்ணுக்கெதிரான ஆணாதிக்க நுண்ணரசியல் எனப் பெண்ணியலாளர்கள் கூறுகின்றனர். ஐயூர் முடவனார் இயற்றிய மற்றொரு பாடலில்,

*"கடல் ஆடு மகளிர் கொய்த ஞாழனும்*
*கழனி உழவர் குற்ற குவளையும்"* [10]

தலைவி இகழ்ந்ததை அறிந்த பரத்தை இனி தலைவன் சேரிக்குச் செல்லமாட்டேன் என்கிறான். மேலும், தலைவியின் ஊருக்குச் சென்றால் வேல் பாய்ந்த பெருங்களிற்றுத் துன்பம் அடைவாள் என்று எச்சரிக்கை செய்வதாக இப்பாடல் அமைகிறது. தலைவனின் பரத்தைமை போக்கைச் சமூகமானது கண்டித்தது இல்லை. பரத்தமையை விட்டு தலைவியை நாடிவரும் தலைவனை ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. ஆண் தனது ஆசைகளை அடக்க இயலாமல் தலைவி, பரத்தை ஆகிய பெண்களின் மீது ஏற்றி ஏசுவதும், பேசுவதுமாக ஒரு சார்பான பார்வையில் பரத்தை கூற்றுப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன எனலாம்.

*"தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்*
*எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை"* [11]

என்ற நூற்பாவில் களவு காலத்தில் தலைவியுடைய களவு வாழ்க்கை கற்பில் முடிய வேண்டுமே என்ற கவலை நிகழ்கிறது. கற்புகாலத்தில் "ஆண்மகனின் பரத்தை ஒழுக்கத்தை எதிர்கொள்ள அவளுடைய பேச்சு நிகழ்கிறது. இந்த கூற்றுகளும் அவளுடைய இன்ப உணர்வுகளைச் சாராமல் சமூக கடமையை நோக்கியனவாய் இருக்கிறது"[12] என்கிறார் க.பஞ்சாங்கம். மேலும், பரணர் இயற்றிய பாடலில்,

*"சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்*
*அம்தண் காவிரி போல*
*கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின் யானே"* [13]

பரத்தையின் ஆடல் பாடலில் தலைவன் மயங்கினான் எனக்கேட்ட தலைவி, அப்பரத்தையைப் பழித்தாள். தன் கூத்து காண வந்த தலைவனைத் தன்னுடன் தொடர்புபடுத்தித் தூற்றுவது கண்டு தலைவி வருந்துமாறு தலைவனைக் கைப்பற்றுவேன் எனப் பரத்தை சூளுரைப்பதாக இப்பாடல் அமைகிறது. "கதை சொல்லும் வடிவங்கள் எல்லாமே ஆண்களால் ஆண்களின் மேலாண்மைக்காக வடிவமைக்கப்பட்டவை. எனவே இருக்கின்ற மரபார்ந்த கதை சொல்லும் வடிவங்கள் அனைத்தையுமே பெண் எழுத்தாளர்கள் உடைத்து வெளியே வரவேண்டும்" [14] என்கிறார் ம.ஜெயந்தி.

**முடிவுரை**

இலக்கியங்கள் பரத்தைமை ஒழுக்கத்தின் மூலம் பெண்களைக் குறை கூறுவதையும் அதே நேரத்தில் ஆண்களுக்குச் சலுகையாகவும் சங்கப்பாடல்களில் பரத்தை கூற்றுப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. பொதுவாகப் பரத்தைமை ஒழுக்கத்தை மேற்கொண்ட ஆணைக் குற்றம் சாட்டாமல் பரத்தையர் மீதே குற்றத்தைச் சுமத்துகின்றனர். இதன் மூலம் தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தால் பாதிக்கப்பட்டது தலைவியும், பரத்தையுமே ஒழிய, தலைவன் இல்லை என்பது புலனாகிறது. பெண்ணியல் அறிஞர்கள் கூற்றுகளைக் கொண்டு பரத்தையர் பாடல்களை ஆராயும்போது, பரத்தையர் பாடல்கள் பெரும்பாலும் ஆண்களே பாடியிருக்கிறார்கள். பரத்தை என்றால் ஒடுக்கப்பட்ட சமூகம். இந்த விளிம்பு நிலைச் சமூகத்தை சமுதாயம்தான் உருவாக்கியள்ளது என்று பெண்ணியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

**சான்றெண் விளக்கம்**


1. நம்பியகப்பொருள், அகத்திணை, நூ. 114, ப. 64.
2. உளவியல் மூலக்கோட்பாடுகள், ப. 16.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல், நூ. 116, ப. 88.
4. அகநானூறு, பா. 186, ப. 328.
5. க. பஞ்சாஞ்கம், நவீன இலக்கிய கோட்பாடுகள், ப. 64.
6. மேலது., பா. 276, ப. 440.
7. மேலது., பா. 166, ப. 304.
8. மாலதி மைத்ரி கவிதைகள், ப. 22.
9. மேலது., பா. 106, ப. 223.
10. மேலது., பா. 216, ப. 365.
11. தொல்.பொருள்.கற்பியல். நூ. 178, ப. 160.
12. நவீன இலக்கிய கோட்பாடுகள், ப. 60.

13. *அகநானூறு, பா. 76.*

14. *மாதி மைத்ரி கவிதைகள், ப. 31.*

**துணைநூற்பட்டியல்**


1. ***நம்பியகப் பொருள் (மூலமும் தெளிவுரையும்),***
   *வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை,*
   *பாரிபுத்தகப் பண்ணை, முதற்பதிப்பு, 2007.*

2. ***உளவியல் மூலக் கோட்பாடுகள்,***
   *கலாநிதி ஏ.எல்.எம்.றியால்,*
   *மெஸ்றோ வெளியீடு,*
   *முதற்பதிப்பு-2008.*

3. ***பொருளதிகாரம் இளம்பூரணம்,***
   *பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை,*
   *முல்லை நிலையம்,*
   *முதற்பதிப்பு-1995.*
   *மறுபதிப்பு-2012.*

4. ***செவ்விலக்கியக் கருவூலம் (சங்க இலக்கியம்) அகநானூறு,***
   *ந.சி. கந்தையா,*
   *தமிழ்மண் அறக்கட்டளை பதிப்பு,*
   *முதற்பதிப்பு-2008.*

5. ***காவ்யா. பெண் எழுத்து மாலதி மைத்ரி கவிதைகள்***
   *ம.ஜெயந்தி,*
   *காவ்யா பதிப்பகம், முதற்பதிப்பு, 2008.*

6. ***நவீன இலக்கியக் கோட்பாடுகள் (கட்டுரைகள்),***
   *க.பஞ்சாங்கம்,*
   *காவ்யா வெளியீடு, முதற்பதிப்பு, 2008.*